**பியகம பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 யூன் 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்டம்பர் 16 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பியகம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டிற்கான பொருட் கணிப்புச் சபை அறிக்கைப் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்த 106 வகைப் பொருட்களது கிரயம் கணக்கிலிருந்து நீக்கப்படவில்லை. | கிரயத்தைக் கணக்கிலிருந்து நீக்க வேண்டும். | எதிர்காலத்தில் கருதப்படும். |
| (ii) | மீளாய்வாண்டினது நிர்மாண தேவைகளுக்குரிய ரூபா 5,973,584 நிலையான சொத்துக் கணக்கிலிடப்படவில்லை. | சொத்துக்கள் கணக்கிலிடப்பட வில்லை. | அடுத்த ஆண்டில் கணக்கிலிடப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | ஆறு கணக்கீட்டு விடய மீதிகளுக்கும் பட்டோலை மீதிகளுக்குமிடையே ரூபா 21,322,018 வித்தியாசமாகவிருந்தது. | வித்தியாசம் இணக்கம் செய்யப்பட்டு திருத்தம் செய்யப்பட வேண்டும். | இவை பரிசீலிக்கப்பட்டு எதிர்காலத்தில் திருத்தப்படும். |

### 1.4 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட 1-3 ஆண்டுகளுக்கிடைப்பட்ட ரூபா 11,285,631 கூட்டுத் தொகையுடைய கடன்பட்டோர் மீதியும் ரூபா 31,637,564 கடன் கொடுத்தோர் மீதியும் தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பெறவேண்டியவற்றை அறவிடும் கொடுப்பனவு செய்ய வேண்டியவற்றை தீர்வு செய்துமிருத்தல் அவசியம் | தேவையான சீராக்கல் மேற்கொள்ளப்பட்டு 1-3 ஆண்டுகளாக உள்ள மீதிகள் நீக்கப்படும். |

### 1.5 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| நிதிப்பிரமாணம் 371 | வழங்கப்பட்ட ரூபா 795,218 கட்டுநிதி தீர்வு செய்யப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | இச்செயற்திட்டத்தின் (பல்நோக்குக் கட்டிடம்) வேலை முடிவடையததால் முற்பணம் அறவிடப்படவில்லை. வேலை முடிவடைந்ததும் அறவிடப்படும். |
| நிதிப்பிரமாணம் 571 | இரு ஆண்டுகளைக் கடந்த ரூபா 2,863,547 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை | நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 142,915,121 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 94,521,294 ஆகும்.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 டிசம்பர் மற்றும 2015 சனவரி மாதங்களில் வழங்கப்பட்ட ரூபா 64,732 பெறுமதியான காசோலை அடுத்த மாதம் தீர்வு செய்யப்பட்டிருந்த போதும், காசேட்டில் சீராக்கல் செய்யப்படாது தொடர்ந்து தீர்வு செய்யப்படாத காசோலையாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்தன. | சீராக்கல் மேற்கொண்டு திருத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திருத்தப்படும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 77,752,222 | 81,010,773 | 89,250,071 | 29,039,953 | 75,598,163 | 82,175,598 | 85,504,030 | 37,279,250 |
| (ii) | வாடகை | 5,058,860 | 5,101,750 | 4,677,487 | 10,910,880 | 4,738,860 | 4,788,947 | 4,667,967 | 10,485,518 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,469,000 | 3,798,671 | 3,833,671 | 3,333,297 | 2,447,000 | 3,057,244 | 3,232,844 | 3,368,297 |
| (iv) | ஏனைய வருமானம் | 243,621,656 | - | 273,382,966 | - | 234,545,600 | - | 203,382,096 | - |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபை முன்னைய ஆண்டில் சேகரித்த வருவாய் ரூபா 296.7 மில்லியனாகும். இதற்கொப்பான மீளாய்வாண்டின் சேகரிப்பு ரூபா 371.1 மில்லியனாகும். அதற்கமைய, ரூபா 74.4 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் ரூபா 150 மில்லியன் முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட்டதாலேயே சபையின் வருவாய் அதிகரித்திருந்தது.

### 2.3.3 தீர்வையும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட ரூபா 37,279,250 தீர்வை | தீர்வை வருவாய் நிலுவையை அறவிட | 2018 ஆம் ஆண்டில் மொத்தமாக அறவிடப்பட்ட தீர்வை நிலுவை ரூபா 76,745,510.77 ஆகும். அது மொத்தத் தொகையில் (ரூபா 37,279,250) 71.74 |

| | | |
|---|---|---|
| நிலுவையில் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டது 21 சதவீதம் மாத்திரமே. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | சதவீதம் ஆகும். கடவத்த உப அலுவலகப் பிரதேசத்தில் 2016, 2017 ஆம் ஆண்டுகளில் கணனிமயப்படுத்தப்பட்ட சொத்துக்களுக்கான தீர்வையில் வயல்கள், பொது வணக்கச் சொத்துக்கள், சபையின் சொத்துக்கள் அதிவேகப் பாதைக்காக அரசாங்கம் சுவீகரித்த காணி என்பன 2018 ஆம் ஆண்டில் நீக்கப்பட்டதன் காரணமாக முன்னைய ஆண்டைவிட தீர்வை குறைந்துள்ளது. |

**2.3.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மொத்தக் கடை வாடகை நிலுவை ரூபா 6,560,426 ஆகும். அதில் ரூபா 4,420,942 கடை உரிமையாளர்களால் தொடரப்பட்ட வழக்குகள் காரணமாக அறவிடப்படாதுள்ளது. | நிலுவை மீதிகள் அறவிடப்பட வேண்டும். | மீதி அறவிடப்பட்டவாறுள்ளது. |

**2.3.5 தொழில் மற்றும் வர்த்தக வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 3,090,660 தொழில் மற்றும் வர்த்தக வரியைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | வருவாய் நிலுவை வினைத் திறனுடன் அறவிடப்பட வேண்டும். | உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரது கடிதத்தின் பிரகாரம் இதனைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**2.3.6 ஏனைய வருவாய்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தொலைத் தொடர்பு கோபுரங்கள் கணிப்பிடப்பட்டு சகல கோபுரங்களும் இனங்காணப்பட்டு கட்டணத்தை அறவிடுவதற்குவதற்குச் சபை தவறியிருந்தது. இனங்காணப்படாதுள்ள | சபைக்குட்பட்ட பிரதேச தொலைத் தொடர்பு கோபுரங்கள் இனங்காணப்பட்டு வருவாய் அறவிடப்பட | நேரடிப் பரிசோதனை எண்ணிக்கையை இனங்கண்டு எதிர்காலத்தில் வருவாய் அறவிடப்படும். |

| | |
|---|---|
| சிலவற்றிற்கும் வர்த்தக வரியும் தீர்வை வரியும் முற்றாக அறவிடப்படாது ஆண்டின் இறுதியில் 15 கோபுரங்கள் மூலம் ரூபா 172,692 தீர்வை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | வேண்டும். |

**2.3.7 சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் சபை 71 நிறுவனங்களுக்கு வர்த்தக அனுமதிப்பத்திரம் வழங்கியிருந்தது. 2019 மே 14 ஆந் திகதியளவிலும் அவற்றிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை. | நிறுவனங்களை இனங்கண்டு சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும். | மத்திய சுற்றாடல் அதிகாரசபை வெளியிட்ட 2008 ஏப்ரல் பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க வர்த்த அனுமதிப் பத்திரத்தைப் பெற வேண்டிய தொழில்களுள் “இ” பிரிவுக்கு மாத்திரம் உள்ளூராட்சி நிறுவனங்கள் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் தயாரிக்கப்பட வேண்டுமாயினும் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் 08 பணிகளுக்கு மாத்திரமே உப விதிகள் தயாரிக்கப்பட்டிருந்தன. | உப விதிகள் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேல் மாகாணத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உப விதிகள் பயன்படுத்தப்படுகின்றன |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் சபை நிறைவேற்ற வேண்டிய பாலர் பாடசாலை, மயானம், நூலகம் மற்றும் விளையாட்டுத் திடல் ஆகிய பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு அனுகூலமாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தை சபையின் தொலைநோக்கும் பணிகளும் பேணுமாறு தயாரிக்க வேண்டும். | தயாரிக்கப்பட்ட உப விதியின் பிரகாரம் சபை நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்கு அனுகூலமாக 2019 ஆம் ஆண்டினது செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. |

**(இ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) சபைக்குட்பட்ட பிரசேதத்தில் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்துக்கு உபவிதி தயாரிக்கப்படவில்லை. 2011 யூலை 05 ஆந் திகதிய 1713/11 ஆம் இலக்க வர்த்தமானி மற்றும் 2007 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மேல் மாகாண திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்து அதிகார சபையினது சட்டவாக்கத்தின் பிரகாரம் கழிவு முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வர்த்தமானியின் பிரகாரம் கழிவுப் பொரள் கட்டணம் அல்லது வரி சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகள் மேற்பார்வை செய்யப்படவில்லை. | தற்போதுள்ள சட்டங்கள் விதிகளுக்கமைய கழிவுப்பொருள் முகாமைத்துவம் நடைபெற வேண்டும். | எதிர்காலத்தில் கட்டணம் அல்லது வரி அறவிடப்பட்டு சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறை மேற்பார்வையிடப்படும். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைத்து நிற்கவல்ல இலக்கு சம்பந்தமான 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் தொடர்பாக சபை அறிந்திராமையால் உலகளாவிய சுட்டிகளின் மூலம் பிரதேச சபைக்குரிய பிரதேசத்தில் உள்ள மக்களது | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்திக்கான கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரித்து அதன் | 2019 - 2023 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்திக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்படுகின்றது |

| | | |
|---|---|---|
| வாழ்க்கைத் தரம், சுகாதார மேம்பாடு என்பவற்றிற்கான நெடுங்காலத் திட்டம் 2018 ஆம் ஆண்டின் பொருட்டுத் தயாரிக்கப்படவில்லை. | பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | . |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| லொறி ஒன்றைக் கொள்வனவு செய்வதற்குத் தேவை இருந்த போதும், தொடர்ச்சியாக வாடகைக்கு லொறியைச் சபை பெற்றிருந்தது. அதற்கமைய, நடப்பாண்டில் வீதிப் பிரிவின் வாடகை வாகங்களுக்கு மாத்திரமே ரூபா 3,647,600 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தேவைக்கேற்ப கொள்வனவு செய்தல் பொருத்தமானது. | எதிர்காலத்தில் இது கருத்திற் கொள்ளப்பட்டு விசேட கவனத்துடன் அவசியமாயிருப்பின் லொறி பெறப்படும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) | | |
| (i) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம், இரண்டாம் நிலை மட்டத்தில் 04 வருவாய் பரிசோதகர் பதவிகள், 01 நூலகர் பதவி, வெற்றிடங்களும் 01 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியும், 01 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியும் மிகையாகவும் இருந்தன. மேலும், ஆரம்ப வெற்றிடங்களாக 02 களத் தொழிலாளர் பதவிகளும், 01 சுகாதாரத் தொழிலாளர் பதவிகளும் வெற்றிடங்களாக இருந்தன. | பதவியணி வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. |
| (ii) 2014 டிசம்பர் 19 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 25/2014 க்கமைய 10 ஆரம்ப மட்டத்திலான சுகாதாரத் தொழிலாளர் பதவிகளும் 01 களத் தொழிலாளரும், 03 முன்பள்ளி உதவியாளர்களும் என 14 பேர்களுக்கு நிரந்தர பதவிகள் வழங்கப்பட்டிருந்த போதும், குறித்த சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் முகாமைத்துவச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு | அங்கீகரிக்கப் பட்ட பதவியணியி ல் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். | சபைக்கு புதிய பதவி அறிமுகம் செய்யப்படும் என்றும் அதில் இவை உள்ளடக்கப்பட மாட்டாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது இந்த எண்ணிக்கையை காலாண்டு அறிக்கைகளில் |

| | | | |
|---|---|---|---|
| | அறிவிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. | | குறிப்பிடுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது. |
| (ஆ) | வேலை நீங்கியமை காரணமாக 5 ஆண்டுகளாக அறவிட முடியாதிருந்த 63 கடன் மீதிகள் ரூபா 43,015 ஆகும். | ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டும். | பணம் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது. |
| (இ) | தற்போது ஓய்வு பெற்றுள்ள 05 பேர்களது ரூபா 40,585 பிணை வைப்புப் வேலையை இடமாற்றம் பெற்ற 05 பேர்களது ரூபா 33,873 பிணை வைப்பும் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் விடுவிக்கப்படாதிருந்தன. | சேவையில் இல்லாதவர் களது பிணை வைப்புப் பணம் விடுவிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் விடுவிக்கப்படும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நடப்பாண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு வழங்கிய ரூபா 4,716,000 பெறுமதியான சொத்துக்கள் 2019 மே 16 ஆந் திகதியளவிலும் சபையால் சுவீகரிக்கப்படாதிருந்தன. | சொத்துக்கள் சுவீகரிக்கப்பட வேண்டும். | இந்த டிறெக்டர், டிரெயிலர் என்பன உடனடியாகச் சுவீகரிக்கப்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆயுதங்களதும் உப கருவிகளதும் கணிப்பு மேற்கொள்ளப்பட்டு உள்ளவாறான கையிருப்பைக் கணக்கிலிடவில்லை. | உள்ளவாறான கையிருப்பு கணக்கிலிடப்பட வேண்டும். | உள்ளவாறான கையிருப்பைக் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5 பொருட் கொள்வனவு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை 2006 - 8.9.1(ஆ) க்கமைய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டுமாயினும், எழுத்துமூல உடன்படிக்கையின்றி ரூபா 2,779,378 க்கு குளிரூட்டியை வழங்கி அது நிறுவப்பட்டிருந்தது. | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குளிரூட்டியைக் கொள்வனவு செய்யும் போது பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை - 2006 8 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஒப்பந்தம் வழங்கப்படுவதில்லை எதிர்வரும் நடவடிக்கைகளுக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. |
| (ஆ) நடப்பாண்டு பொருட் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடங்காத கொள்வனவுகள் 26 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | கொள்வனவுகள் பொருட் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இந்நிலைமை திருத்தப்படும். |

### 3.5.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பொது நிதிய செயற்திட்டங்களுக்குப் புறம்பாக 50 செயற்திட்டங்கள் சபை அமுலாக்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும், 16 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன. | உத்தேச செயற்திட்டத்திற்கு அங்கீகாரம் பெறப்பட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். | ‘‘சுகித புரவர’’ செயற்திட்டம் அதுலாகியவாறுள்ளது. 11 செயற்திட்டங்களுக்கான உடன்படிக்கைகள் இல்லாமையால் பிரதேச செயலகம் அவற்றை அமுலாக்குவதை நிறுத்தியிருந்தது. |